செ.வெ.எண் : 14 / ஆகஸ்ட் நாள் : 07.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

# முதுகுளத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காலியாகவுள்ள தற்காலிக உதவியாளர் பணியிடத்திற்கு தகுதியுடைய நபர்கள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

முதுகுளத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் செயல்படும் (Public Private Partnership) பணிகளை கவனிக்க தற்காலிகமாக உதவியாளர் நிலையில் ஒரு பணியிடத்தை நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை கவனிக்க ஏதாவதொரு பட்டப்படிப்பு படித்திருப்பதோடு கணினியில் நன்கு பணியாற்ற திறமை படைத்தவர்களாக இருக்க வேண்டும். மேலும் குறைந்தபட்சம் ஓராண்டு ஏதேனும் ஒரு நிறுவன அலுவலகத்தில் பணியாற்றி முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். 01.06.2017 அன்று குறைந்தபட்ச வயது 18 முதல் அதிகபட்ச வயது 35க்குள் இருக்க வேண்டும். இதர முன்னுரிமை உள்ளவர்களுக்கு அரசு விதிகளின் படி வயது வரம்பில் சலுகை வழங்கப்படும். இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் கமுதி, முதுகுளத்தூர் மற்றும் பரமக்குடி சுற்று வட்டாரத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும். இந்த உதவியாளர் பணிக்கு மாதம் தொகுப்பூதியமாக ரூ.10,000/- வழங்கப்படும்.

மேலும் இந்த உதவியாளர் பணியானது முற்றிலும் தற்காலிகமானது எனவும் இதனைக் கொண்டு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது சுய விபரங்களை (Bio Data) பூர்த்தி செய்து 23.08.2017 அன்று மாலை 5.00 மணிக்குள் "முதல்வர்,அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், முதுகுளத்தூர் 623 704 தொலைபேசி எண் : 04576-222114" என்ற முகவரிக்கு நேரிலோ தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் தேர்வு குழுவினரால் பரிசீலனை செய்து, தகுதியுடைவர்களுக்கு நேர்முக தேர்விற்கு வருமாறு பின்னர் தெரிவிக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**